[1974 சனவரி 22

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதைத்தான் நான் சொன்னேன். மொத்தமாகப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். நிர்வாகச் சீர்திருத்தக் குழு இதற்குமேலே சில சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அதன் பரிசீலனை முடிந்த பிறகு முடிவான அபிப்பிராயம் சொல்லப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1971-ம் ஆண்டே அவர்கள் இதே தீர்மானங்களை நிறைவேற்றி, தங்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று சொன்னார்களே, அது சம்பந்தமாக உடனடியாக முடிவு எடுப்பதுபற்றி ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அது சம்பந்தமாகவும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். மருதாசலம்: பஞ்சாயத்து யூனியன், நகரசபை பணிகளில் 18 சதவிதம் கண்டிப்பாக அரிசனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நியதியை நிர்ணயிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போதே ஒருசில இடங்களில் அது பின்பற்றப்படுகிறது. எல்லா இடங்களிலும் நிரந்தரமாகப் பின்பற்ற என்ன என்ன செய்யலாம் என்பது யோசிக்கப்படும்.

ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

*80 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியாற்றின் குறுக்கே, புதுவாயல்-பெரியபாளையம் நெடுஞ்சாலை புதுப்பாளையம் கிராமத்தை இணைக்கும் தரைப் பாலம் அமைக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அரசு தனது 27–11–73 நாளிட்ட ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை ஆணை எண் 2651-ல் ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் தரைப் பாலத்தை அமைக்க அனுமதி வழங்கியிருக்கிறது. இந்த வேலை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

1974 சனவரி 22]

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்களுக்கு இதற்கு நன்றி செலுத்துகிற நேரத்தில் மொத்தம் முன்பு 8 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டதே. மேலும் தொகை ஒதுக்கப்படுமா? அடிப்படையான வேலைகள் எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வினுவில் குறிப்பிடப்பட்டுள்ள பால வேலைக்குத் தோராயமாக 8.25 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்ற மதிப்பீட்டின்படி 1973 ஜூலை மாதம் கூடிய நிதிநிலைக்குழு இவ்வேலைக்கு ஒப்புதல் அளித்தது. ஆனல், திருத்திய மதிப்பீட்டின்படி இவ் வேலைக்கு ரூபாய் 4 இலட்சம் போதுமானது என்ற கருத்துக்கு ஏற்ப இப்பால வேலையை 4 இலட்ச ரூபாய் செலவில் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மேலவெள்ளூர்-அம்பலத்தாடி இணைப்புச்சாலை

* 81 **வினு.—திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர் வெள்ளக்கரை சாலையில் இருந்து அம்பலத்தாடிக்குச் செல்லும் இணைப்புச்சாலை எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர்-வெள்ளக்கரை சாலையிலிருந்து அம்பலத்தாடிக்குச் செல்லும் இணைப்புச் சாலை மராமத்து வேலை தற்போது ஊரக வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Scheme for Rural Employment) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் வேலை 31-12-1973-க்குள் பூர்த்தி செய்யப்படும்.

சின்னக்கண்ணனூர் சாலை

* 82 **வினு.—திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானமதுரை ஊராட்சி ஒன்றியம், சின்னக்கண்ணனூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?